**Sub Court, Eraniel**

C.O.S. No.1/2025
Date: 25.02.2026.
PW4 - திரு. அருள் ஜெஸ்டின் தாஸ்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எனக்கு நீதிமன்ற அழைப்பாணை வழங்கபடவில்லை என்றால், சரிதான். வாதி என்னை அழைத்ததன் பேரில் தான் நான் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன் என்றால், சரிதான். வாதிதான் என்னை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார் என்றால், சரியல்ல. வாதி இன்று நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால், சரிதான். வாதியை எனக்கு 40 வருடங்களுக்கு மேலாக தெரியும். எனது சொந்த ஊர் திருநயினார் குறிச்சி. தற்போது நான் குடியிருப்பது மார்த்தாண்டம் அருகில் கரவிளாகம். இந்த வழக்கின் வழக்குரை மற்றும் வழக்கு ஆவணங்களை நான் படித்து பார்த்திருக்கிறேன். நான் பொறியியல் வல்லுநர் (Qualified Engineer) இல்லை என்றால், சரிதான். நான் Contractor என்று அரசு உரிமம் எதுவும் பெறவில்லை என்றால், சரிதான். நான் இந்த வழக்கில் கட்டிட ஒப்பந்தக்காரர் என்று குறிப்பிடவில்லை. எனக்கு கட்டிட வேலை சம்பந்தமாக அனுபவங்கள் இல்லை என்றால், சரியல்ல. கட்டிடம் பிரதிவாதிக்கு உரிமைப்பட்டது என்றால், சரிதான். பிரதிவாதியுடன் எனக்கு பழக்கம் கிடையாது என்றால், அந்த வீட்டினை நான் பார்க்க சென்ற போது அவர் அங்கு இருந்தார். பிரதிவாதி அவருடைய வீட்டை மதிப்பீடு செய்வதற்கு என்னிடம் வேண்டுகோள் கொடுத்தார். அவ்வாறு வேண்டுகோள் கொடுத்ததற்கு எழுத்துபூர்வமான ஆதாரம் என்னிடம் இல்லை. பிரதிவாதியின் வீட்டை நான் மதிப்பீடு மற்றும் அளவீடு எதுவும் செய்யவில்லை என்றால், சரியல்ல. என்னால் தன்னிச்சையாக நடக்க இயலாது என்றால், தற்சமயம் விபத்து ஏற்பட்டதன் காரணமாக எனக்கு நடக்க இயலவில்லை. முன்பும் நான் இவ்வாறு நடக்க இயலாமையில் தான் இருந்தேன் என்றாலும், அதனால் நான் கட்டிடத்தை மதிப்பீடு செய்ய இயலாது என்றாலும், சரியல்ல. அப்பொழுது நான் நல்ல உடல் நிலையில் இருந்தேன். பிரதிவாதியின் கட்டிடத்தை நான் 06.02.2020 அன்று பார்வையிட்டேன். 06.02.2020 கட்டிடத்தை நான் பார்த்ததாக எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால், சரியல்ல. Construction Material cost பற்றி யார் மூலமாக தெரிந்து கொண்டேன் என்றால், நான் அதே field ல் இருப்பதால் எனக்கு தெரியும். Suppliers–ரிடமும் கேட்டு

தெரிந்து கொண்டேன். நான் அந்த வீட்டை பார்வையிட்ட போது புகைப்படம் எதுவும் எடுக்கவில்லை. அந்த வீட்டின் கட்டுமானத்தின் அளவுகள், பற்றிய விபரங்களை நான் அளவீடு செய்து இரண்டு தரப்பினரிடமும் கொடுத்தேன். நான் கட்டிடத்தை பார்வையிட காரணத்தால், என்னால் புகைப்படங்கள் மற்றும் அளவீடுகள் குறித்த எந்த விபரமும் தாக்கல் செய்ய முடியவில்லை என்றால், சரியல்ல. நான் கொடுத்துள்ள கட்டிட மதிப்பீடு கற்பனையானது என்றால், சரியல்ல. வாதியின் வேண்டுகோளுக்கு இணங்க அவருக்கு ஆதரவாக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. உண்மைக்கு புறம்பாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.